ஸ்ரீ : ||

ஸ்ரீ சங்கர பகவத் பாதாப்யாம் நம:

ஆதி ஸ்ரீ சங்கர பகவத் பாதாள்
அருளிச்செய்த
"உபதேச பஞ்சகம்"
எனப்படும்

# ஸோபான பஞ்சகம்

நாகர லிபியிலும் அதற்கேற்ற தமிழ் அக்ஷரத்திலும்
வரையப்பட்ட மூலத்துடனும் தமிழ்
கருத்துடனும் கூடியது.

ஸ்ரீ காஞ்சி காம கோடி பீடாதிபதி ஜகத்
குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களால்
பார்வையிடப்பட்டு அங்கீகரிக்கப் பெற்றது.

முதற் பதிப்பு

து. க. ஜகன்னாதாசார்யர் அண்டு ஸன்
ஜி. டி. சென்னை.

காபிரைட்] தாது ௵ தை ௴ [விலை 0-1-0

PRINTED AT

THE DHARMIC PRINTING WORKS

GEORGETOWN, MADRAS

## ஸோபான பஞ்சகம்*

वेदो नित्यमधीयतां तदुदितं कर्म स्वनुष्ठीयतां
तेनेशस्य विधीयतामपचितिः काम्ये मतिस्त्यज्यताम् ।
पापौघः परिधूयतां भवसुखे दोषोऽनुसंधीयता-
मात्मेच्छा व्यवसीयतां निजगृहात्तूर्णं विनिष्क्रम्यताम् ॥१॥

1. வேதோ நித்ய மதீயதாம் ததுதிதம்
கர்மஸ்வனுஷ்டீயதாம்
தேநேசஸ்ய விதீயதா முபசிதி:
காம்யே மதிஸ் த்யஜ்யதாம் |
பாபௌக: பரிதூயதாம் பவஸுகே
தோஷோ (அ) னுஸந்தீயதாம்
ஆத்மேச்சா வ்யவஸீயதாம் நிஜக்ருஹாத்
தூர்ணம் விநிஷ்க்ரம்யதாம் ||

[கருத்துரை] பிரதிதினம் வேதத்தை அத்யயனம் செய்யவேண்டும். அதில் சொல்லிய நித்ய கர்மங்களை அனுஷ்டிக்க வேண்டும். அந்த ஸ்வகர்மங்களால் ஈசுவரனை ஆராதிக்கவும் வேண்டும். ஆனல் அதிலுள்ள காம்ய கர்மங்களில் புத்தியைச் செலுத்த வேண்டாம். பாபத்தை மேற்கூறிய சாதனங்களால் பரிஹரிக்கவும். விஷய சுகங்களின் பலனை தோஷங்களை அடிக்கடி ஆலோசிக்கவும். பரமாத்ம விஷய

---

*இதற்கு "உபதேச பஞ்சகம்" என்றும் சொல்லுவதுண்டு. ஆதி ஸ்ரீசங்கர பகவத் பாதாள் கைலாஸத்திற்குச் செல்லும் பொழுது இந்த ஐந்து சுலோகங்கள் மூலம் உலகிற்கு உபதேசம் செய்தருளியதாகச் சொல்லப்படுகிறது.

மான விருப்பத்தை விருத்தி செய்யவும். அதற்கென்றே தன் வீட்டினின்றும் வெளிக்கிளம்பவும் வேண்டும்.

सङ्गः सत्सु विधीयतां भगवतो भक्तिर्दृढाधीयतां
शान्त्यादिः परिचीयतां दृढतरं कर्माशु संत्यज्यताम्।
सद्विद्वानुपसर्प्यतां प्रतिदिनं तत्पादुके सेव्यतां
ब्रह्मैकाक्षरमर्थ्यतां श्रुतिशिरो वाक्यं समाकर्ण्यताम् ॥२॥

2. ஸங்கஸ் ஸத்ஸு விதீயதாம் பகவதோ
பக்திர் த்ருடா (ஆ) தீயதாம்
சாந்த்யாதி : பரிசீயதாம் த்ருடதரம்
கர்மாசு ஸந்த்யஜ்யதாம் |

ஸத்வித்வா னுபஸர்ப்யதாம் ப்ரதிதினம்
தத்பாதுகே ஸேவ்யதாம்
ப்ரஹ்மைகாக்ஷர மர்த்யதாம் ச்ருதிசிரோ
வாக்யம் ஸமாகர்ண்யதாம் ||

[க - ரை] ஸன்மார்க்கத்தில் நிலைபெற்ற ஸாதுக்களின் ஸங்கத்தைத் தேடி அடையவும். பகவானிடத்தில் த்ருட மான பக்தியைச் செலுத்தவும். சாந்தம் முதலிய குணங்களை விசேஷமாய் அப்யாஸம் செய்யவும். மேற்கூறிய சாதனங் களின் உறுதியினல் ஸகல கர்மங்களையும் விட்டு மௌனி நிலையை அடையவேண்டும். அப்பால் ஸத் பதார்த்தத்தின் உண்மையை யுணர்ந்த வித்வானை அடைந்து அவரது பாத கமலங்களை நன்கு ஸேவிக்கவும். அவரிடமிருந்து நித்ய பரி பூர்ண, அனந்த, ஆனந்த ஸ்வபாவமான ப்ரஹ்ம பதார்த்தத் தையே கருதி யாசித்து வேதாந்த வாக்கியங்களின் பரம தாத் பர்யங்களை நன்ருய்க் கேட்டறிய வேண்டும்.

वाक्यार्थश्च विचार्यतां श्रुतिशिरः पक्षः समाश्रीयतां
दुस्तर्कात्तु विरम्यतां श्रुतिमतस्तर्कोऽनुसंधीयताम् ।
ब्रह्मैवास्मि विभाव्यतामहरहर्गर्वः परित्यज्यतां
देहेऽहंमतिरुज्झ्यतां बुधजनैर्वादः परित्यज्यताम् ॥३॥

3. வாக்யார்த்தஸ்ச விசார்யதாம்
ச்ருதி சிர : பக்ஷ : ஸமாதீயதாம்
துஸ்தர்க்காத்து விரம்யதாம் ச்ருதிமதஸ்
தர்க்கோ (அ) னுஸந்தீயதாம் |
ப்ரஹ்மைவாஸ்மி விபாவ்யதாம் அஹரஹர்
கர்வ : பரித்யஜ்யதாம்
தேஹே (அ) ஹம் மதிருஜ்யதாம்
புத ஜனைர் வாத : பரித்யஜ்யதாம் ||

[க - ரை] வேதாந்த வாக்கியங்களை மனன ஸாதனமான யுக்திகளைக் கொண்டு நன்கு விசாரித்து அவைகளின் முக்கிய தாத்பர்யமான அத்வைத பக்ஷத்தை நிச்சயிக்க வேண்டும். எல்லையில்லாத சுஷ்க தர்க்கத்தை விட்டு வேதத்திற்கு அனுகூலமான தர்க்கத்தை அப்யஸிக்கவும். மேற்படி யுக்திகளின் த்ருடத்தினால் 'பரப்பிரஹ்மம் நானே' என்று எப்பொழுதும் தியானம் செய்யவேண்டும். பிரதிதினம் கர்வமின்றி சரீரத்தில் 'அஹம்' என்ற அபிமானத்தை விடுத்து நன்கு உணர்ந்தவர்களுடன் வாது பேசாமலிருத்தல் வேண்டும்.

क्षुद्व्याधिश्च चिकित्स्यतां प्रतिदिनं भिक्षौषधं भुज्यतां
स्वाद्वन्नं न तु याच्यतां विधिवशात्प्राप्तेन संतुष्यताम् ।
शीतोष्णादि विषह्यतां न तु वृथा वाक्यं समुच्चार्यता-
मौदासीन्यमभीप्स्यतां जनकृपानैष्ठुर्यमुत्सृज्यताम् ॥४॥

4. க்ஷுத்வ்யாதிஸ்ச சிகித்ஸ்யதாம்
பிரதிதினம் பிக்ஷௌஷதம் புஜ்யதாம்
ஸ்வாத்வன்னம் ந து யாச்யதாம் விதிவசாத்
பிராப்தேந ஸந்துஷ்யதாம் |
சீதோஷ்ணாதி விஷஹ்யதாம் நது வ்ருதா
வாக்யம் ஸமுச்சார்யதாம்
ஔதாஸீன்ய மபீப்ஸ்யதாம் ஜனக்ருபா
நைஷ்டுர்ய முத்ஸ்ருஜ்யதாம் ||

[க - ரை] பசி, தாகம், வியாதி முதலியவைகளுக்குப் பரிஹாரம் செய்வதற்கென்றே தினந்தோறும் பிக்ஷையினால் கிடைத்ததைப் புஜிக்கவேண்டும். ஆனால் ருசியான அன்னத்தைக் கருதி யாசிக்காமல் அதிருஷ்ட வசத்தாலும் முந்தி நியமிக்கப்படாமலும் வந்ததைக்கொண்டு திருப்தி யடையவேண்டும். சீதோஷ்ணம் முதலிய த்வந்த்வங்களை ஸஹித்து வீணான பேச்சை விலக்கி உதாஸீன நிலையைப்பற்றி ஜனங்களினிடத்தில் கிருபை, த்வேஷம் முதலியவைகளைப் பாராட்டாமல் இருக்கவேண்டும்.

एकान्ते सुखमास्यतां परतरे चेतः समाधीयतां
पूर्णात्मा सुसमीक्ष्यतां जगदिदं तद्बाधितं दृश्यताम् ।
प्राक्कर्म प्रविलाप्यतां चितिबलान्नाप्युत्तरैः श्लिष्यतां
प्रारब्धं त्विह भुज्यतामथ परब्रह्मात्मना स्थीयताम् ॥५॥

5. ஏகாந்தே ஸுகமாஸ்யதாம் பரதரே
சேதஸ் ஸமாதீயதாம்
பூர்ணாத்மா ஸுஸமீக்ஷ்யதாம் ஜகதிதம்
தத்பாதிதம் த்ருச்யதாம் |

ப்ராக்கர்மப் பிரவிலாப்யதாம் சிதிபலாந்
நாப்யுத்தரை : ச்லிஷ்யதாம்
ப்ராரப்தம் த்விஹ புஜ்யதா மத
பரப்ரஹ்மாத்மநா ஸ்தீயதாம் ||

[க - ரை] ஜனங்களின் சந்தடியில்லாத ஏகாந்தப் பிரதேசத்தில் சுகமாக உட்கார்ந்து பரப்ரஹ்மத்தினிடத்தில் மனதை நன்கு செலுத்தி, அகண்ட பரிபூர்ணமான ஆத்ம நிலையை அறிந்து, இப் பிரபஞ்சம் முழுவதும் அந்த நிலையினுல் பாதிக்கப்பெற்று மித்யையா யிருப்பதை உணரவும். மேற்கூறிய நிலையின் பயனுக பூர்வ கர்மங்களை ஒழித்து ஞானபலத்தினுல் பின் வரும் கர்மங்களில் ஸம்பந்திக்காமலும் பிராரப்தத்தை மட்டும் போகத்தினுல் ஒழித்து ப்ரம்மாத்மா வென்ற அத்வைத நிலையில் நன்கு இருத்தலும் வேண்டும்.

—:0:—

# நமது தமிழ் ப்ரசுரங்கள்.

—: o :—

| | | |
|---|---|---|
| **ஸ்ரீ ஆளவந்தார்** | | ரூ-அ-பை |
| | ஜீவ்ய சரித்திரமும் வைபவமும் | 0-2-0 |
| **ஸ்ரீ ராமானுஜர்** | | |
| | ஜீவ்ய சரித்திரமும், வைபவமும், ஸித்தாந்தச் சுருக்கமும் அடங்கியது. மறுமுறை சோதிக்கப்பட்டு விருத்தி செய்யப்பட்ட இரண்டாம் பதிப்பு | 0-2-0 |
| **ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன்** | | |
| | ஜீவ்ய சரித்திரமும் வைபவமும் | 0-2-0 |
| **ஸ்ரீமந் மணவாள மாமுனிகள்** | | |
| | ஜீவ்ய சரித்திரமும் வைபவமும் | 0-2-0 |
| **ஸ்ரீ சங்கரர்** | | |
| | ஜீவ்ய சரித்திரமும் வைபவமும். அவர் செய்தருளிய ஸோபானபஞ்சகம், பஜகோவிந்தம் எனப்படும் த்வாதசமஞ்சரிகாஸ்தோத்திரம்,, இரண்டும் (தமிழ் அக்ஷர) மூலத்துடனும் கருத்துரைகளுடனும் கூடியது. இது காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு கும்பகோணம் ஸ்ரீசங்கராசார்யர் ஸ்வாமிகளால் பார்வையிடப்பட்டு ஆமோதிக்கப் பெற்றது. | 0-2-0 |
| **ஸ்ரீ பகவத் கீதை உபந்நியாஸம்** | | |
| | பூரி ஸ்ரீ கோவர்த்தன மடாதிபதிகளான ஜகத்குரு பாரதி கிருஷ்ண தீர்த்த ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் செய்த முதல் மூன்று ஸ்ரீ பகவத் கீதோபந்யாசங்களின் சுருக்கம். இதில் ஸம்ஸ்க்ருதபாஷையின் மேன்மை, ஹிந்து ஸனாதந தர்மத்தின் உயர்வு, ஸ்ரீபகவத் கீதையின் மேன்மை முதலியவை அடங்கியுள்ளன. | 0-2-0. |